


**10. 07. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. **அறிவுசார்ந்த பாரம்பரிய கலாச்சாரம் தேசத்தின் பலமாக திகழ்கிறது** என்று குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் தெரிவித்துள்ளார்

2. **வளர்ச்சியடைந்த பாரதம் இலக்கை எட்டுவதில் நம்நாட்டின்** பல்கலைக்கழகங்கள் இன்றியமையா பங்காற்றும் என்று மத்திய கல்வியமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

3. **திருவாரூரில் 11 கோடி ரூபாய் மதிப்பிட்டில் புதிய வணிக வளாகம்** ஏற்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. **உள்நாட்டு மீன்பிடி தொழிலை மேம்படுத்த ஆற்றுப்படுகைகளில்** மீன் குஞ்சுகள் விடப்படுவதாக மாநில கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

5. **இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3-வது டெஸ்ட்** கிரிக்கெட் போட்டி லண்டன் லார்ட்ஸில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்குகிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖

**ஜக்தீப் தன்கர்**

**இந்தியாவின் உலகளாவிய வளர்ச்சி, அறிவுத்திறன் மற்றும்** கலாச்சார மதிப்பீடுகளுடன் இணைந்து பயணிக்க வேண்டியதன் அவசியத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் இந்திய அறிவுசார் முறைகள் தொடர்பான முதலாவது வருடாந்திர மாநாட்டில் இன்று உரையாற்றிய குடியரசு துணைத்தலைவர், அறிவுசார் பாரம்பரிய கலாச்சார நடைமுறைகள் ஒரு தேசத்தின் பலமாக திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

பழமையான அறிவுத்திறமைகள், படைப்பாற்றல் திறனை எந்தவிதத்திலும் பாதிக்காது என்று குறிப்பிட்ட அவர், மாறாக புதிய உத்வேகத்தையே அவை ஏற்படுத்தும் என்று கூறினார்.

ஆன்மீக உணர்வுகளும், அறிவியல் கண்டுபிடிப்புகளும் இணைந்து பயணிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஏட்டில் உள்ள எழுத்து வடிவ நடைமுறைகளையும், பழங்கால அனுபவத்தையும் அடிப்படையாக கொண்டு இந்திய அறிவுத்திறன் ஆராய்ச்சிகள் அமையவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

ஐரோப்பிய பல்கலைக்கழகங்கள் வருவதற்கு முன்னரே பாரத நாட்டின் பல்கலைக்கழகங்கள் அறிவுத்திறனின் மையமாக திகழ்ந்ததை திரு. ஜக்தீப் தன்கர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖

**தர்மேந்திர பிரதான்**

தேசிய கல்விக்கொள்கையின் எதிர்கால திட்டங்களை முன்னெடுத்துச் சென்று, வருங்கால கல்விக்கான பாதையை வடிவமைப்பதன் அவசியத்தை மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம் கெவாடியாவில் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மற்றும் கல்வியாளர்கள் பங்கேற்ற 2 நாள் மாநாட்டில் இன்று உரையாற்றிய அமைச்சர் உயர்கல்வியின் தரத்தை முழுமையாக மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள அரசு உறுதிபூண்டிருப்பதாக எடுத்துரைத்தார்.

வளர்ச்சியடைந்த பாரத இலக்கை எட்டுவதில் நம்நாட்டின் பல்கலைக்கழகங்கள் முக்கிய பங்காற்றும் என்றும் அவர் கூறினார்.

குருபூர்ணிமா தினமான இன்று எதிர்கால இந்தியாவை வடிவமைக்கும் வல்லுநர்களிடையே உரையாற்றுவது குறித்து திரு.தர்மேந்திர பிரதான் மகிழ்ச்சி தெரிவித்தார்.

இந்த 2 நாள் மாநாட்டில் மாநாட்டில் இளையோருக்கான ஆளுமை கல்வி திட்டத்தில் புதிய மாதிரியை உருவாக்குவது, எதிர்கால பாரதத்திற்கான வழிமுறைகளை ஆராய்வது போன்றவை குறித்து கல்வியாளர்கள் முக்கிய ஆலோசனைகளை மேற்கொள்கின்றனர்.

❖❖❖❖❖❖❖

**நிர்மலா சீதாராமன்**

**வங்கி சாரா நிதி நிறுவனங்கள் கடன் தொகையை** வசூலிக்கும் போது ரிசர்வ் வங்கி வகுத்துள்ள நெறிமுறைகளுக்கு ஏற்ப நியாயமாகவும், கண்ணியத்துடனும், நடப்பதன் அவசியத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் வங்கிசாரா நிதி நிறுவனங்கள் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றியஅவர், முறையான தேவைகளுக்காக கடன் வழங்கப்பட வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

வங்கி தொகையை திருப்பிச்செலுத்த திறன் படைத்தவர்களுக்கு கடன் வழங்கப்படவேண்டுமென்று அறிவுறுத்திய அவர், வட்டி விகிதங்கள் நியாயமாக இருக்க வேண்டுமென்றும் சுட்டிக்காட்டினார்.

ஆளுமை, சவால்கள், வாடிக்கையாளர் நலன் ஆகியவற்றை ஒருங்கிணைத்து உரிய நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டுமென்றும் திருமதி. நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

**எல். முருகன்**

**விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் பத்திரிக்கையாளர்கள் மீது** ம.தி.மு.க. கூட்டத்தில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு காரணமானவர்கள் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இச்சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ள அமைச்சர், பொதுவாழ்வில் உள்ளவர்கள், பொது இடங்களில் கண்ணியத்துடன் நடந்துகொள்ளவதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖

**வேலூர் சிப்பாய்**

**சுதந்திர போராட்டத்திற்கு வித்திட்ட வேலூர் சிப்பாய் புரட்சியின்** 219-ம் ஆண்டு நினைவுதினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி வேலூர் கோட்டை சிப்பாய் புரட்சி நினைவுத் தூணில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. சுப்புலட்சுமி மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

வேலூர் சிப்பாய் புரட்சி குறித்து மாவட்ட அருங்காட்சியக காப்பாளர் திரு.சரவணன் எடுத்துரைகையில்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**திருவாரூரில் இன்று** 846 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதோடு, முடிவுற்ற திட்டப்பணிகளையும் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர், திருவாரூரில் 11 கோடி ரூபாய் மதிப்பிட்டில் புதிய வணிக வளாகம் அமைக்கப்படும் என்றார்.

நன்னிலம் வண்டாம் பாளையத்தில் 56 கோடி ரூபாய் மதிப்பில் மாவட்ட மாதிரிபள்ளி ஏற்படுத்தப்படும்,

மன்னார்குடியில் மாணவிகள் பயன்பெறும் வகையில் 18 கோடி ரூபாய் செலவில் மகளிர் கலை அறிவியல் கல்லூரி அமைக்கப்படும் உள்ளிட்ட அறிவிப்புகளையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

ஆறுகள், வாய்க்கால்கள், உள்ளிட்ட நீர்நிலைகள் 48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

திருவாரூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 241 கோவில்களில் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதாக கூறிய முதலமைச்சர் விவசாயிகளுக்கான ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் 67 ஆயிரத்து 181 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

**உதயநிதி ஸ்டாலின்**

**அரசின் திட்டப்பணிகள் பயனாளிகளை சென்றடையும் வகையில்** துறை அதிகாரிகள் செயலாற்ற வேண்டுமென்று, துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற அனைத்து துறை அலுவலர்கள் ஆய்வுக்கூட்டத்தில், துறை வாரியாக மக்கள் நலத்திட்டங்களை அவர் ஆய்வுசெய்தார்.

**.. வாய்ஸ் ..**

நாமக்கல் மாவட்டத்தில் நிலுவையில் உள்ள இதரப் பணிகளையும் விரைந்து முடிக்க அவர் கேட்டுக்கொண்டார்.

மாவட்ட விளையாட்டு அரங்ககத்தில் நவீன உடற்பயிற்சி கூடத்தை இன்று பிற்பகல் திறந்து வைத்து விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடுகிறார்.

❖❖❖❖❖❖❖

**அனிதா ராதாகிருஷ்ணன்**

உள்நாட்டு மீன்பிடி தொழிலை மேம்படுத்தும் வகையில் குளங்களில் மீன்வளர்ப்பது போல் ஆற்றுப்படுகையிலும் மீன் குஞ்சுகள் விடப்படுதாக மாநில கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தாமிரபரணி ஆற்றில் ஒருலட்சம் நாட்டின கெண்டை மீன் குஞ்சுகளை இருப்பு செய்யும் வகையில் இன்று நீரில் மீன் குஞ்சுகளை விடும் பணிகளை இன்று துவக்கி வைத்து அமைச்சர் பேசினார்.

**.. வாய்ஸ் ..**

கடந்த 2 ஆண்டுகளாக தாமிரபரணி, பவானி, காவிரி உள்ளிட்ட ஆற்றுப்படுகைகளில் மீன்குஞ்சுகள் விடப்படுவதாக கூறினார்.

தொடர்ந்து மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம் தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட மீன்பிடி தொழில் சார்ந்த 9 மகளிர் குழுக்களுக்கு முன்கடன் காசோலையை வழங்கிய அமைச்சர், மாணாக்கருக்கு கல்வி உதவித்தொகையையும் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

**தமிழகத்தில் இந்துசமய அறநிலையத்துறை சட்டத்தின் கீழ்** கல்விநிலையங்களை தொடங்க முடியும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பழம்பெரும் காலத்திலிருந்தே இவ்வழக்கம் நடைமுறையில் உள்ளதாக அவர் கூறினார்.

இந்துசமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கும் கல்லூரிகளில் ஏழை எளிய மாணவர்கள் கல்வி பயின்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

**சிவசங்கர்**

**பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஒன்றியம்,** நல்லறிக்கை முதல் இலுப்பையூர் வரையில், 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணிகளை மாநில போக்குவரத்து மின்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ். சிவசங்கர் இன்று தொடங்கிவைத்தார்.

60 லட்சம் ரூபாய் செலவில் நல்லறிக்கை முதல் புதுகுடிசை வரையிலான சாலை பணிகளையும் அமைச்சர் துவக்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

**கன்னியாகுமரி**

கன்னியாகுமரி மாவட்ட பள்ளிகளில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாணாக்கருக்கு பயிற்சி அளிக்கப்படுவதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖❖

**இருவரி**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு பாலிடெக்னிக்** மற்றும் ஐ.டி.ஐ-க்களில் நடைபெறும் மாணாக்கர் சேர்க்கையில் தகுதியுடையோர் விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. அருணா கேட்டுக்கொண்டுள்ளார்.

**அரியலூர் மண்டலத்தில் நவரை பருவத்தில் சாகுபடி** செய்யப்பட்ட நெல்லை கொள்முதல் செய்யும் வகையில் 8 கிராமங்களில் இன்று திறக்கப்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**கோவில்**

**திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபால சுவாமி** திருக்கோவில் ஆனித்திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தெப்பத்திருவிழா இன்றிரவு நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு** இடையிலான 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன் லார்ட்ஸில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்குகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று சமநிலையில் உள்ளன.

❖❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**இத்தாலி சேலஞ்சர் கோப்பை டென்னிஸ்** போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் சுமித்நாகல் - இத்தாலியின் **Marco**-வை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖❖